Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-
+91 9853719337, 7436914247

ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 96 30.09.2025 செவ்வாய்க்கிழமை
Chennai Volume: 01 Issue: 96 Tuesday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(30–9–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–14

பிறை: வளர்பிறை

திதி
அஷ்டமி பிற்பகல் 2.52 வரை பிறகு நவமி

நட்சத்திரம்:
பூராடம் மறுநாள் விடியற்காலை 5.54 வரை பிறகு உத்திராடம்

யோகம்
சித்த/மரணயோகம்

ராகுகாலம்
பிற்பகல் 3.00–4.30 மணி.

எமகண்டம்
காலை 9.00 – 10.30 மணி.

சூலம் – வடக்கு.

நல்ல நேரம் :
காலை 8–9 மணி. மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | மகிழ்ச்சி |
| ரிஷபம் | ஆசை |
| மிதுனம் | அமைதி |
| கடகம் | பரிசு |
| சிம்மம் | புகழ் |
| கன்னி | சாதனை |
| துலாம் | மகிழ்ச்சி |
| விருச்சிகம் | நலம் |
| தனுசு | நன்மை |
| மகரம் | மேன்மை |
| கும்பம் | களிப்பு |
| மீனம் | கவனம் |

# சுதேசி பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும்

## மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி அறிவுரை



**புதுடெல்லி, செப்.30:**

வரும் பண்டிகை காலத்தில் சுதேசி பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும் என்று பிரதமர் மோடி அறிவுறுத்தி உள்ளார். 126-வது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: தீபாவளிக்கு பிறகு சத் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. மத்திய அரசின் முயற்சியால் கொல்கத்தாவின் துர்கா பூஜை யுனெஸ்கோவின் கலாச்சார பட்டியலில் சேர்க்கப்பட்டது. இதேபோல சத் பூஜையையும் யுனெஸ்கோ பட்டியலில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜெயந்தியை கொண்டாட உள்ளோம். நமது தேசத் தந்தை சுதேசி கொள்கையை வலியுறுத்தினார். அவற்றில் காதி மிகவும் முக்கியமானது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சுதந்திரத்துக்குப் பிறகு காதி மீதான ஆர்வம் குறைந்தது. மத்திய அரசின் முயற்சிகளால் கடந்த 11 ஆண்டுகளாக காதி பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகிறது. வரும் காந்தி ஜெயந்தி நாளில் குறைந்தபட்சம் ஒரு காதி பொருளை வாங்க வேண்டுகிறேன்.

இதற்கு தமிழ்நாட்டை சேர்ந்த யாழ் நேச்சுரல்ஸ் ஓர் உதாரணம் ஆகும். அந்த நிறுவன உரிமையாளர்கள் அசோக் ஜெகதீசன், பிரேம் செல்வராஜ் ஆகியோர் கார்ப்பரேட் வேலையை துறந்து புதிய முயற்சியை மேற்கொண்டனர். புற்கள் மற்றும் வாழை நார்களிலிருந்து யோகா பாய்களை அவர்கள் உருவாக்கினர். மூலிகை சாயங்களால் துணிகளுக்கு சாயம் பூசினர். இந்த புதிய முயற்சி மூலம் சுமார் 200 குடும்பங்களுக்கு அவர்கள் வேலைவாய்ப்பை வழங்கி உள்ளனர்.

ஆர்எஸ்எஸ் அமைப்புக்கு புகழாரம்: அடுத்த சில நாட்களில் விஜயதசமியை கொண்டாட உள்ளோம். இந்த நாளில் ஆர்எஸ்எஸ் அமைப்பு 100-வது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது. பல நூற்றாண்டுகளாக இந்தியா அடிமைத்தனத்தில் சிக்கித் தவித்தது. இந்த சூழலில் டாக்டர் ஹெட்கேவர் கடந்த 1925-ம் ஆண்டு விஜயதசமி நாளில் ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தை நிறுவினார்.

அவரது மறைவுக்கு பிறகு பரம் பூஜ்ய குருஜி தேசத்துக்கு சேவை செய்யும் மகத்தான பணியை முன்னெடுத்து சென்றார். கடந்த 100 ஆண்டுகளாக ஆர்எஸ்எஸ் அமைப்பு இடைவிடாமல் தேச சேவையில் ஈடுபட்டு வருகிறது. ஆர்எஸ்எஸ் அமைப்புக்கும் அதன் தொண்டர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் பண்டிகை காலத்தில் சுதேசி பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மட்டுமே வாங்குவேன் என்று ஒவ்வொரு இந்தியரும் உறுதியேற்க வேண்டும். நமது பாதை சுதேசி பாதையாக இருக்க வேண்டும். அனைத்து துறைகளிலும் நாம் சுயசார்பை எட்ட வேண்டும். பண்டிகை நாளில் நமது வீடுகளை சுத்தம் செய்கிறோம். அதேநேரம் நமது தெருக்கள், சுற்றுப்புறங்கள், சந்தைகள், கிராமங்கள், நகரங்களையும் சுத்தம் செய்ய வேண்டும். இது நமது தலையாய கடமை ஆகும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

கடற்படை அதிகாரிகளுடன் உரையாடல்: மனதின் குரல் நிகழ்ச்சியின்போது பிரதமர் மோடி கூறும்போது, "கடலில் சுமார் 50,000 கி.மீ. பயணம் செய்து கடற்படை பெண் அதிகாரிகள் தில்னா, ரூபா சாதனை படைத்துள்ளனர். அவர்கள் தங்களது சாகச பயண அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்வார்கள்" என்றார். புதுச்சேரியை சேர்ந்த ரூபாவுடன் பிரதமர் பேசியபோது தமிழில் வணக்கம் கூறினார். இதைத் தொடர்ந்து லெப்டினென்ட் கமாண்டர் ரூபா அழகிரிசாமி கூறியதாவது:

கடந்த 2017-ம் ஆண்டு கடற்படையில் சேர்ந்தேன். எனது தந்தை தமிழ்நாட்டை சேர்ந்தவர். அம்மா புதுச்சேரியை சேர்ந்தவர். விமானப் படையில் தந்தை பணியாற்றினார். அவரை பின்பற்றி நான் கடற்படையில் இணைந்தேன். பாய்மர படகில் இருவர் மட்டுமே பயணம் செய்தோம். 3 புயல்களை எதிர்கொண்டோம்.

ரூபா அழகிரிசாமி, தில்னா.

சில நேரங்களில் 3 மாடி உயரத்துக்கு அலைகள் எழுந்தன. அந்த அலைகளை எதிர்கொண்டோம். உறையவைக்கும் குளிர், கடுமையான வெப்பம், சூறாவளி காற்றை சமாளித்தோம். அண்டார்டிகாவில் பயணம் செய்தபோது அங்கு வெப்பநிலை ஒரு டிகிரி செல்சியஸாக இருந்தது. அண்டார்டிகா குளிரை சமாளிக்க 7 அடுக்கு ஆடைகளை அணிந்தோம். இவ்வாறு ரூபா அழகிரிசாமி தெரிவித்தார்.

கடற்படை லெப்டினென்ட் கமாண்டர் தில்னா கூறியதாவது: கடந்த 2014-ம் ஆண்டில் கடற்படையில் சேர்ந்தேன். நான் கேரளாவின் கோழிக்கோட்டை சேர்ந்தவள். எனது தந்தை ராணுவத்தில் பணியாற்றினார். எனது அம்மா இல்லத்தரசி. எனது கணவர் இந்திய கடற்படையில் பணியாற்றுகிறார்.

கடந்த 2024 -ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி கோவாவில் இருந்து கடல் பயணத்தை தொடங்கி கடந்த மே 29-ம் தேதி கரைக்கு திரும்பினோம். 238 நாட்கள் சுமார் 50,000 கி.மீ. கடலில் பயணம் செய்தோம். பாயிண்ட் நீமோவில் தேசிய கொடியை ஏற்றி சாதனை படைத்தோம். பாய்மரப் படகில் அங்கு சென்ற முதல் இந்தியர், முதல் ஆசியர் என்ற பெருமையை பெற்றோம். இவ்வாறு தில்னா பேசினார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போரை நிறுத்த அமைதித் திட்டத்தை அறிவித்தது அமெரிக்கா



**காசா, செப்.30:**

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போரை நிறுத்த 21 அம்ச அமைதித் திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. பாலஸ்தீனத்திலுள்ள காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து தீவிரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பிணைக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரில் சுமார் 65,000-க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் காசாவில் போரை நிறுத்துவதற்கான ஒப்பந்தத்தை இறுதி செய்யும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு உள்ளது.

ஹமாஸிடமிருந்து பிணைக் கைதிகளை மீட்டு போரை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார். மேலும், ஹமாஸ் பிணைக் கைதிகளை விடுவிக்க 48 மணி நேரம் கெடுவைவும் அமெரிக்கா விதித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் இஸ்ரேல், பாலஸ்தீனம் இடையே போரை நிறுத்த 21 அம்ச அமைதித் திட்டத்தையும் அமெரிக்கா தற்போது அறிவித்துள்ளது.

அமெரிக்கா அறிவித்துள்ள 21 அம்சத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய பிரிவுகள்:

காசா பகுதி தீவிரவாதம் இல்லாத, அமைதியான மண்டலமாக மாற்றப்படும். காசா மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம்.

இரு தரப்பும் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டால், உடனடியாக மோதல்கள் நிறுத்தப்படும். இஸ்ரேல் தனது நடவடிக்கைகளை நிறுத்தி, காசாவிலிருந்து படிப்படியாக வெளியேறத் தொடங்கும். பாலஸ்தீனர்களை கொண்ட ஒரு குழுவைக் கொண்டு காசாவில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும். அந்த அமைப்பே காசாவில் அன்றாட நிர்வாகத்தைக் கவனிக்கும்.அமெரிக்காவின் தலைமையில் அரபு மற்றும் ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட ஒரு புதிய சர்வதேச குழு இதைக் கண்காணிக்கும். பாலஸ்தீனிய ஆணையம் தனது சீர்திருத்தத் திட்டத்தை முடிக்கும் வரை காசாவின் மறுசீரமைப்புக்கு நிதி திரட்டுவது இக்குழுவின் பணியாகும்.

இந்தத் திட்டத்துக்கு இஸ்ரேல் சம்மதம் தெரிவித்த 48 மணி நேரத்துக்குள், உயிருடன் உள்ள மற்றும் இறந்த அனைத்துப் பிணைக் கைதிகளும் இஸ்ரேல் வசம் ஒப்படைக்கப்படுவார்கள். போர் உடனடியாக நிறுத்தப்படும் என்பன போன்ற அம்சங்கள் இந்தப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

அதேநேரத்தில் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க இங்கிலாந்து உள்ளிட்ட சில நாடுகள் முடிவு செய்துள்ளன. அதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு ஒப்புக் கொள்ளவில்லை. இதை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்று அவர் அறிவித்துள்ளார்.

## 24H கார் பந்தயத்தில் 3ம் இடத்தை பிடித்தது அஜித்குமார் ரேஸிங் அணி



**ஸ்பெயின், செப்.30:**

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக மட்டுமின்றி, ஒரு தீவிர கார்பந்தய வீரராகவும் திகழ்ந்து வருபவர் நடிகர் அஜித்குமார். இவர் குட் பேட் அக்லி படத்திற்கு பிறகு கார் ரேசில் கவனம் செலுத்தி வருகிறார் .

கடந்த ஆண்டு முதல் கார் ரேஸிங்கில் தீவிரம் காட்டி வரும் அஜித்குமார், 'அஜித்குமார் ரேஸிங்' என்ற தனது சொந்த பந்தய நிறுவனத்தை உருவாக்கியுள்ளார். இந்தக் கார் பந்தய நிறுவனம் துபாய், பெல்ஜியம் போன்ற நாடுகளில் நடைபெற்ற கார் பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகளையும் வென்றுள்ளது.

நடிகர் அஜித்குமார் ரேஸிங் அணி ஸ்பெயினில் நடைபெற்ற க்ரெவென்டிக் 24H பந்தயத்தில் கலந்து கொண்டது.

இந்நிலையில், க்ரெவென்டிக் 24H பந்தயத்தில் அஜித்குமார் ரேஸிங் அணி 3ம் இடத்தை பிடித்து அசத்தியுள்ளது.

## கரூர் கூட்டநெரிசல்: 2-வது நாளாக ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை



**கரூர், செப்.30:**

கரூரில் 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை தமிழக அரசு அமைத்துள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் ஏற்கனவே தூத்துக்குடி துப்பாக்கி சூடு தொடர்பாக விசாரணை ஆணைய தலைவராக இருந்தவர். ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் நேற்றே தனது விசாரணையை தொடங்கினார். நேற்று பகல் கரூருக்கு சென்ற அவர், முதல்கட்டமாக 41 பேர் பலியான வேலுச்சாமிபுரத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு ஏராளமான போலீஸ் அதிகாரிகள் குவிக்கப்பட்டு இருந்தனர். அவர்களிடம் நடந்தவற்றை கேட்டறிந்தார்.

பிரசார கூட்டத்துக்கு போலீசார் விதித்த நிபந்தனைகள் என்னென்ன? எந்தெந்த நிபந்தனைகளை எல்லாம் மீறினார்கள். சம்பவ இடத்தில் எத்தனை போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர் என்பன உள்ளிட்டவற்றை கேட்டறிந்தார். பின்னர் அங்கிருந்து கரூர் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களிடம் நடந்தது என்ன? என்பது குறித்து கேட்டறிந்தார்.

மேலும், த.வெ.க. நிர்வாகிகளிடமும், சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் சிலரிடமும் விசாரணை நடத்தினார். இந்த விசாரணைக்கு பிறகு விரைவில் விரிவான அறிக்கையை அவர் தமிழக அரசிடம் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், கரூரில் கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்தில் 2-வது நாளாக ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை நடத்தி வருகிறார். சம்பவ இடத்தில் பொதுமக்களிடம் அவர் விசாரணை மேற்கொண்டார்.

## கரூர் வருகிறார் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன்



**சென்னை, செப்.30:**

கரூரில் நடந்த த.வெ.க. தலைவர் விஜய் பிரசார கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. 82 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் உள்பட 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி பலியான 41 பேருக்கு அஞ்சலி செலுத்தும்விதமாக, வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் இன்று மாநிலம் தழுவிய கடையடைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா தமிழக அரசு சார்பில் ரூ.10 லட்சமும், த.வெ.க. சார்பில் தலா ரூ.20 லட்சமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு மத்திய அரசின் சார்பில் தலா ரூ.2 லட்சம் நிவாரணமும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரமும் வழங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்து இருந்தார்.இதேபோல் கரூர் மாவட்ட பா.ஜ.க. சார்பில் ரூ.1 லட்சம் நிதி உதவி அளிக்கப்படும் என்று பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை அறிவித்து இருந்தார்.

பிரசார கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்தில் 2-வது நாளாக ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் கரூர் செல்வதாக தகவல் வெளியாகி உள்ளது.

டெல்லியில் இருந்து விமானம் மூலமாக கோவை வந்தடைந்த மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் கரூர் செல்கிறார். கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து அவர் ஆறுதல் கூற உள்ளார்.

தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.
anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

## ராஜராஜேஸ்வரி & கஜலட்சுமி அலங்காரம்



**தஞ்சாவூர், செப். 30:** தஞ்சாவூர் மகர்நோன்புச் சாவடி, V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள, ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ பிரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (28.09.2025) நவராத்திரி ஆறாம் நாள் ராஜராஜேஸ்வரி அலங்காரத்திலும் மற்றும் தனித்தாயார் கஜலட்சுமி அலங்காரத்திலும் காட்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் பரம்பரை நிர்வாக அறங்காவலர் B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச் சாவடி, தஞ்சாவூர்**

## ஏழாம் நாள் கண்ணாடி இழை அலங்காரம்



ஏழாம் நாள் கண்ணாடி இழை அலங்காரம் விழுப்புரம் சாலமேடு வராஹி அம்மன்,

## நவராத்திரி 7-ஆம் நாள் விழா



**திருவண்ணாமலை,செப்.30:** இரமணாஸ்ரமம் 7-ஆம் நாள் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஆயிரம் தலை கொண்ட நாகத்தின் மேல் படுத்து உறங்கும் காட்சி, சேஷ சயனம் கோலத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## நவராத்திரி 7-ஆம் நாள் கலை விழா







**கடலூர், செப்.30:** கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று 7-வது நாள் நவராத்திரி உற்சவருக்கு நாராயணி அலங்காரம், மூலவருக்கு பல வகையிலான சாக்லைட்டு அலங்காரத்தில் பாவாடை, ஜடை,கிரீடம் வாசவி அம்மன் அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.108 திவ்யதேசம் பூஜை, அஷ்டோத்திர பாராயணம், மஞ்சள், குங்குமம்,ஆரத்தி தட்டுகள் வைத்து வெகு சிறப்பான அலங்காரத்துடன் நவராத்திரி கலை விழா கொண்டாடப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# கோவில்பட்டியில் கேரளா எலைட் ஃபர்னிச்சர்ஸ் திறப்பு விழா





**கோவில்பட்டி, செப். 30:** கோவில்பட்டி இளையரச னேந்தல் ரோட்டில் புதிதாக அமைக்கப்பட்ட கேரளா எலைட் ஃபர்னிச்சர்ஸ் திறப்பு விழா நேற்று நடந்தது.

கேரளா எலைட் ஃபர்னிச்சர்ஸ் நிறுவனம் சிவகாசியில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் 2ஆவது கிளை, கோவில்பட்டியில் அமைக்கப்பட்டு, அதன் திறப்பு விழா கோலாகலமாக நடந்தது. முன்னாள் அமைச்சர்,கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் செ.ராஜூ, நகர்மன்ற தலைவர் கருணாநிதி, பிஎஸ்ஆர்., கல்வி நிறுவனங்களின் தாளாளர் சோலைச்சாமி, தொழிலதிபர் ஜெயசங்கர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர்.

சீரியல் நடிகை சல்மா அருண், விஜய் டிவி புகழ் திவாகர் ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். கடையின் உரிமையாளர்கள் நல்லீஸ்வரன் சிவசங்கரி, குருமூர்த்தி பத்மாவதி ஆகியோர், நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றனர்.

திறப்பு விழாவை முன்னிட்டு, முதல் 500 பேருக்கு, ரூ.10-க்கு ரூ.1,500 மதிப்பிலான குக்கர் வழங்கப்பட்டது. அதோடு, திறப்பு விழாவையொட்டி, கட்டில், டைனிங் டேபிள், சோஃபா அனைத்துப் பொருட்களும் 20 முதல் 25 சதவீத தள்ளுபடி விலையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தொழிலதிபர்கள், அரசியல் கட்சியினர், உள்ளூர் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.**கோவில்பட்டி செய்தியாளர் ராஜ்குமார்**

# ஏழை மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி

### மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் வழங்கினார்





**கோவில்பட்டி, செப். 30:** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் சவுத் இந்தியன் ஸ்போர்ட்ஸ் & கல்ச்சுரல் மற்றும் நேதாஜி ரோலர் ஸ்கேட்டிங் அகாடமியின் 12ம் ஆண்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சௌபாக்கியா மஹாலில் கொண்டாடப்பட்டது. இதில் மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் கலந்து கொண்டார். இத்துடன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பைகளை வழங்கி பாராட்டினார்.

**ஏழை மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி:**

மேலும், நேதாஜி அகாடமி சார்பாக கோவில்பட்டி பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் படிப்புக்கான உபகரணங்கள் வழங்க தன்னுடைய பங்களிப்புகான நிதி உதவியை மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் வழங்கினார்.

இதில் அகாடமி பயிற்சியாளர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**கோவில்பட்டி செய்தியாளர் ராஜ்குமார்**

# சக்தி மசாலா நிறுவனம் விஜயா பதிப்பகம் வாசகர் வட்டம் இணைந்து வழங்கும் கி.ரா. விருது - 2025



**கோவை, செப். 30:** சக்தி மசாலா நிறுவனம் விஜயா பதிப்பகம் வாசகர் வட்டம் இணைந்து வழங்கும் "கி.ரா. விருது " ₹5,00,000 இந்த வருடம் எழுத்தாளர் சு. வேணுகோபால் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கோவை பீளமேடு PSG தொழில்நுட்ப கல்லூரி " D" அரங்கில் நேற்று (28.09.25) நடைபெற்ற இவ்விழாவில் இவ்விருதினை வழங்கி , உச்சநீதிமன்ற நீதியரசர் ஆர். மகாதேவன் சிறப்புரை ஆற்றுகையில், "புத்துயிர்ப்பு" எனும் சு.வேணுகோபால் கதையை சிலாகித்து பேசியதோடு, நாமக்கல் கவிஞர் திருக்குறளை சிறப்பித்த கவிதையையும் கூறி அதற்கான விளக்கமும் தந்தார்.

கௌரியின் இறை வணக்கத்துடன் துவங்கிய நிகழ்ச்சியில் டாக்டர் பி.சி. துரைசாமி தலைமையுரை ஆற்றினார்.

வாழ்த்துரை வழங்கிய எழுத்தாளர் பாவண்ணன், மகாபாரதத்தில் அபிமன்யு மனைவி உத்தரை முனிவருக்கு செய்த பணிவிடையால் கிடைத்த விசித்திரக் கண்ணாடி பற்றிய கதையைச் சொன்னார் . அதில் யாரைப் பற்றி நினைக்கிறார்களோ அவர் உருவம் தான் தெரியுமாம், அவரை நினைப்பவர் உருவம் தெரியாதாம்.

உத்தரை நினைத்ததும் கண்ணாடியில் கணவர் "அபிமன்யு" முகமும் அபிமன்யு நினைத்ததும் மனைவி "உத்தரை " முகமும் தெரிந்ததாம். இதை பகவான் ஸ்ரீகிருஷ்ணரை நினைக்கச் சொன்ன போது , " சகுனி" உருவம் தெரிந்ததாம். அதுபோல ஒரு கண்ணாடி தற்போது இருந்தால், எழுத்தாளர் "சு. வேணுகோபால்" உருவம் தெரியாது அவரது மண்ணும் மண்சார்ந்த மக்களும்தான் தெரிவார்கள் என ஒரு அழகான ஒப்பீட்டுடன் கதையை முடித்தார்.

சிவகுமார் தான் 1963 ம் வருடம் முதல் "டைரி" எழுதி வருவதாகக் கூறி இந்த நிகழ்வும் " டைரியில்" பதிவாகும் என்றார். டாக்டர் சாந்தி துரைசாமி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். தமிழுக்கான தங்களின் பங்களிப்பு என்றும் என்றென்றும் இத்தகைய நிதியளிப்பாகத் தொடரும் எனக் கூறினார்.எழுத்தாளர் சு.வேணுகோபால் தன் ஏற்புரையில் : 1986- 1994 எட்டு ஆண்டுகள் வாசகனாக இருந்து, எழுத்தாளர் ஆக மாறிய கதையையும் ஆரம்பத்தில் மகாத்மா காந்தியின் " சத்திய சோதனை" கவிஞர் கண்ணதாசனின்" வனவாசம்" படித்து அதைப்போல எழுத வேண்டும் என நினைத்தாராம் அது அவர்களின் வாழ்க்கை வரலாறு எனத் தெரியாமல்... நீதியரசர் மகாதேவன் தந்தை அரங்கநாதன் எழுத்துகளை கையெழுத்துப் பத்திரிக்கையான " முன்றில்" இதழில் படித்ததையும் நடிகர் சிவகுமாரின் "கொங்குத்தேன்" புத்தகத்தில் அவரின் சின்னம்மா மகன் குமரேசன் தியாக உள்ளத்தையும் வாசித்ததைக் குறிப்பிட்டு இருவரும் தனக்கு தொப்புள் கொடி உறவு என்றார்.

29 ஆண்டுகளுக்கு முன் சிவகுமாரை ஒரு உணவகத்தில் சந்தித்து மின்னல் வேகத்தில் சென்ற அவரோடு பேச முடியாமல் போன தருணத்தையும் நினைவு கூர்ந்தார். தன் ஆரம்பகாலத்தில் சந்தித்த எழுத்தாளுமைகள் ஜெயகாந்தன், சுஜாதா பற்றிய நினைவுகளைப் பகிர்ந்ததுடன், வழிகாட்டியான கோவை ஞானி , பரிசு வழங்கிய சக்தி மசாலா, விஜயா வாசகர் வட்டம், விழாவைச் சிறப்பித்த பலருக்கும் நன்றி தெரிவித்தார்.

பார்வையாளர்களாக தினமணி ஆசிரியர் திரு. வைத்தியநாதன் , கவிஞர் சிற்பி. பாலசுப்ரமணியம் இருவரும் வந்திருந்தது தனிச்சிறப்பு. முன்னதாக விஜயா பதிப்பகம் வேலாயுதம் எல்லோரையும் வரவேற்க, நிகழ்ச்சியை திரு. இல.சிவ சக்தி வடிவேல் தொகுத்து வழங்கினார்.

நாட்டுப்பண் உடன் விழா இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## நவராத்திரி 7-ஆம் நாள் அலங்காரத்தில் தவழ் கிருஷ்ணன் தந்த பல்லக்கில் மெரவணை அருள் பாலிக்கும் காட்சி.





**கோயம்புத்தூர் , செப் .30:** கோயம்புத்தூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி 7-ஆம் நாள் அலங்காரத்தில் தவழ் கிருஷ்ணன் தந்த பல்லக்கில் மெரவணை அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## நவராத்திரி 7ஆம் நாள் கலை விழா







**திருவண்ணாமலை, செப்.30:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் மூலவர்க்கும், உற்சவருக்கும் அலங்காரங்கள் பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. மற்றும் பரதநாட்டிய கலை நிகழ்ச்சிகளும் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டன. பரதநாட்டிய கலை நிகழ்ச்சிகளிலும் ஏராளமானோர் கலந்து கொண்டு கண்டு களித்தனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் மாடவீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து கலெக்டர் ஆய்வு




**திருவண்ணாமலை, செப்.30:** திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் மாடவீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ்,இஆப, அவர்கள் இன்று (29.09.2025) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலை சுற்றியுள்ள மாடவீதிகளில் நெடுஞ்சாலைத் துறை சார்பாக கான்கிரீட் தளம் மற்றும் மாநகராட்சி சார்பாக கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்றதை ஆய்வு மேற்கொண்டார். திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மாடவீதியில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக முதற்கட்டமாக ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் 01 கி.மீட்டர் தொலைவிற்கு நவீன இயந்திரம் கொண்டு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டது.

மேலும் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் 1.7 கி.மீட்டர் தொலைவிற்கு கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணியை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு பணிகள் விரைவாகவும் தரமாகவும் மேற்கொள்ளப் பட்டு வருகிறதா என்பதை கண்காணித்து வருகிறார்கள்.

அதன்படி மாடவீதிகளை சுற்றி நெடுஞ்சாலை துறை மூலமாக கான்கிரீட் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், மாநகராட்சி சார்பாக மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருவதையும் கள ஆய்வு மேற்கொண்டதில் 80% பணிகள் முடிந்துள்ளது. மீதம் எஞ்சியுள்ள பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் துரிதமாகவும் தரமாகவும் விரைந்து முடிக்க வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் மாநகராட்சி ஆணையர் திரு.செல்வபாலாஜி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நவராத்திரி 7-ஆம் நாள் கலை விழா






**கடலூர், செப்.30:** கடலூர் மாவட்டம் புவனகிரி வாசவி ஸ்ரீகன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி 7ஆம் நாள் உற்சவம் மூலவர் லட்சுமி அலங்காரத்தில், உற்சவர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. இவ்விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் ஆர்ய வைசிய சமாஜம் புவனகிரி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கீழடி 18 சித்தர்கள் கோவிலில் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி குருபூஜை விழா பக்தர்கள் வழிபாடு







**மானாமதுரை செப் 30** சிவகங்கை மாவட்டம் கீழடி கிராமத்தில் மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள 18 சித்தர்கள் திருக்கோவில் உள்ளது . இங்கு பதிணென் சித்தர் களுக்கு தனி சன்னதிகள் உள்ளன. ஒவ்வொரு சித்தரின் நட்சத்திரம் வரும் நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். இங்கு உள்ள கட்டி குளம் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி குருபூஜை விழா சிறப்பு யாகம் அன்னதானம் நடைபெற்றது. யாகம் நடத்தினர். அதைத் தொடர்ந்து 61 வகையான மூலிகைகள் அபிஷேகம் சிறப்பு தீபாராதனை பூஜைகள் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை, அன்னதானம் நடைபெற்றது. ஏராளமான அடியார்கள் பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். இதற்க்கான ஏற்பாடுகளை ச 18 சித்தர்கள் திருக்கோவில் ஆன்மிக அறக்கட்டளை நிர்வாகிகள் செய்து இருந்தனர்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6,500 கனஅடியாக நீடிப்பு



**ஒகேனக்கல்,செப்.30:** கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று 6,500 கனஅடியாக வந்தது. இன்றும் அதேஅளவு தண்ணீர் நீடித்து வந்தது.

இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.சுற்றுலா பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## பிளஸ் 2 பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இரண்டு நாள் பயிற்றரங்கம்



மதுரை சௌராஷ்டிர mentors சார்பாக பிளஸ் 2 பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இரண்டு நாள் பயிற்றரங்கம் நடைபெற்றது. மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தங்கள் திறனறிந்து, வழி அறிய, வழிகாட்ட வந்திருந்த ஆன்றோர் சொல் கேட்டு வழியொன்றை அறிந்து கொண்டதிலே உளம் மகிழ்ந்தனர்.

## ‘என் வாழ்வின் மிகப்பெரிய துக்கம்’ மனம் திறந்த ஆதவ் அர்ஜுனா



**சென்னை,செப்.30:** கரூரில் நேற்று முன்தினம் தமிழக வெற்றிக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 10 குழந்தைகள் உட்பட 41 பேர் உயிரிழந்தனர்.

இந்த துயர சம்பவம் குறித்து இரங்கல் தெரிவித்த விஜய், உயிரிழந்தோர் குடுமபத்தினருக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு அறிவித்தார். அதே சமயம் த.வெ.க. சார்பில் இரண்டாம் கட்ட தலைவர்கள் இந்த சம்பவம் குறித்து வாய் திறக்காமல் இருந்தனர்.

இந்நிலையில், கரூர் துயர சம்பவம் நடந்து 24 மணிநேரம் கடந்த நிலையில் ஆதவ் அர்ஜுனா இதுகுறித்து மனம் திறந்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "என் வாழ்வின் மிகப்பெரிய துக்கத்தைக் கடந்த இருபத்தி நான்கு மணிநேரமாக அனுபவித்து வருகிறேன்... இந்த மரணங்கள் என் நெஞ்சை இன்னும் உலுக்கிக்கொண்டு உள்ளது. மரணத்தின் வலியையும், அந்த மக்களின் அழுகுரலையும் கடந்து செல்ல வழியின்றி தவித்துவருகிறேன்.

ஒரு மரணத்தின் வலியை ஐந்து வயது சிறுவனாக எனது தாயின் தற்கொலையில் பார்த்தபோதே உணர்ந்தவன். அந்த வலியை இப்போது எனக்கு மீண்டும் ஏற்படுத்தியுள்ளது இந்த மரணங்கள். இந்த நிமிடம் வரை இந்த துயர நிகழ்வைக் கடந்து செல்ல முடியாமலும், உறவுகளை இழந்து தவிக்கின்ற அந்த குடும்பங்களின் தவிப்புமே என்னை மீளாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு இந்த மரணங்கள். அந்த குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பும், வலியும் சராசரி மனிதனாகக் கடந்து செல்லும் மனநிலையில் என் மனம் இப்போது இல்லை. இறந்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அண்ணனாக, தம்பியாக, மகனாக, அந்த குடும்பங்களின் கனவுகளையும், நம்பிக்கையையும் சுமந்து செல்லும் ஒரு உறவாகவே எனது வாழ்க்கை பயணம் இருக்கும் என்பதை, இறப்பின் வலியை சிறுவயதிலேயே உணர்ந்த ஒருவனாக உறுதியுடன் கூறுகிறேன். துயரமும், துக்கமும் மட்டுமே என் மனதைச் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், இழப்புகளைச் சந்தித்த என் உறவுகளுக்கு ஒரு உறவாய் என் எண்ணங்களை பகிர்ந்துகொண்டுள்ளேன்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்!" என்று தெரிவித்துள்ளார்.

## தினம் ஒரு குறள்



**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.** - குறள் 94

బాధ పరచునట్టి పేదరికము బాపు
తీపిగాను జెప్ప దెలుసుకొన్న. - కురల్ 94

दुख-वर्धक दारिद्र्य भी, छोड़ जायगा साथ ।
सुख-वर्धक प्रिय वचन यदि, बोले सब के साथ ॥ - कुराल 94

Thunpuroοum Thuvvaamai Illaakum Yaarmaattum
Inpuroοum Inso Lavarkku - Kural 94

## நவராத்திரி 6-ஆம் நாள் விழாவில் மரகதவல்லி அம்பாள் உடனுரை ஸ்ரீ வீர ஜம்பேஸ்வரர்



**திருவண்ணாமலை, செப்.30:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஆர்.குன்னத்தூரில் நவராத்திரி 6-ஆம் நாள் விழாவில் மரகதவல்லி அம்பாள் உடனுரை ஸ்ரீ வீர ஜம்பேஸ்வரர் அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தூய்மை பணியாளர்களுக் கான சிறப்பு மருத்துவ முகாம்




உளுந்தூர்பேட்டை நகராட்சி தூய்மை பணியாளர்களுக் கான சிறப்பு மருத்துவ முகாம் நேற்று காலை நகராட்சி தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் வைத்தியநாதன், நகராட்சி ஆணையர் புஸ்ரா உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்

## த.வெ.க. தலைவர் விஜயிடம் தொலைபேசியில் பேசிய ராகுல் காந்தி





**சென்னை,செப்.30:** கரூர் வேலாயுதம்பாளையத்தில் நேற்று முன்தினம் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்தனர்.

ஒன்றைப்படை எண்ணிக்கையில் தொடங்கிய பலி எண்ணிக்கை, படிப்படியாக அதிகரித்து, 41 ஆக உயர்ந்துள்ளது. கரூர் ஆஸ்பத்திரி மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளில் 82 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் பிரசார கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த துயர சம்பவம் தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி த.வெ.க. தலைவர் விஜயிடம் கேட்டறிந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு த.வெ.க. தலைவர் விஜயிடம் ராகுல் காந்தி இரங்கல் தெரிவித்தார். இருவரும் சுமார் 15 நிமிடங்கள் தொலைபேசியில் பேசியதாக தகவல் வெளியாகி உள்ளது.

**நாமக்கல்லில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களால் பரபரப்பு**

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்ததைக் கண்டித்து, தமிழ்நாடு மாணவர் சங்கம் பெயரில் நாமக்கல் முழுவதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த போஸ்டரில் “தமிழக அரசே 39 அப்பாவி உயிர்களைப் பலி வாங்கி, தப்பி ஓடிய விஜய் என்கிற அரசியல் தற்குறியை கொலைக்குற்றவாளி என கைது செய்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## கட்சியினரை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் விஜய்க்கு இல்லை: ஹிந்து முன்னணி குற்றச்சாட்டு



**திருப்பூர்,செப்.30:** ”விஜயிடம், கட்சியினரை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் இல்லை,” என, ஹிந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை:த.வெ.க., தலைவர் விஜயின் பொறுப்பற்ற தன்மையாலும்; தமிழக அரசின் அலட்சியத்தாலும், 40 அப்பாவி மக்களின் உயிர் பறிபோனது, மனதை உலுக்கியுள்ளது. கட்சி ஆரம்பித்தது முதல் இதுநாள் வரை நடந்த ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டத்தில், எவ்வித கட்டுப்பாடும், ஒழுங்கும் இல்லை. பொது சொத்துக்கு சேதம் ஏற்படுத்தியதுடன், போக்குவரத்துக்கு இடையூறாகவும் நடத்தியுள்ளனர்.

நம்பி வரும் மக்களை வழிநடத்தும் தலைமை பண்பும், ஆற்றலும் கொண்டவரே உண்மையான தலைவர்; நடிகர் விஜயிடம் கட்சியினரை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் இல்லை. சமூக அக்கறையின்றி அவரது நடவடிக்கைகள் இருந்து வருகிறது.

சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், பொது சொத்துக்களை சேதப்படுத்தி, சாலையோர பூங்காவை துவம்சம் செய்தனர். மதுரை மாநாட்டில், குடிநீர் பாட்டில் மற்றும் உணவு பொட்டலங்களை தூக்கி வீசியதால், கட்சியினர் முண்டியடித்து சென்றனர்.

த.வெ.க., தலைவர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டாலும் முறைப்படுத்தி வழிநடத்த வேண்டிய விஜய், ஒரு வார்த்தை கூட பேசாதது துரதிஷ்டவசமானது. கரூரில், மதியம் 12:00 மணிக்கு மக்களை சந்திப்பதாக அறிவித்துவிட்டு, இரவு 7:00 மணிக்கு வந்துள்ளார். காலை முதல், குழந்தைகளுடன் காத்திருந்த மக்கள், குடிநீர், உணவு கூட கிடைக்கவில்லை. கட்சியினர், குடிநீர் பாட்டில் மற்றும் உணவுப் பொட்டலத்தை தூக்கி வீசியதால், அதைப்பெற முண்டியத்து சென்றபோது, நெரிசல் ஏற்பட்டு, குழந்தைகள், பெண்கள் உட்பட, 40 பேர் பலியாகிய பெருந்துயரம் நடந்துள்ளது.

மற்ற கட்சிகள், எப்படி பாதுகாப்புடன் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர் என்று முதலில் கற்றுக்கொண்டு, பிறகு கூட்டம் நடத்த வேண்டும்.அனுமதி வழங்கிய நிலையில், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டிய கடமையும் தமிழக அரசுக்கும், போலீசுக்கும் உள்ளது.

அரசியல் பாலபாடம் கூட அறியாத விஜய், முதலில் அரசியலை கற்றுக் கொண்டு, தலைமை பண்பை வளர்த்துக் கொண்ட பிறகு அரசியலில் ஈடுபடுவதுதான், மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பானது.

தமிழக அரசு, துவேஷ அரசியலை கைவிட்டு, மக்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி செயல்பட வேண்டும்; எதிர்காலத்தில் இதுபோன்ற துயர சம்பவம் நடக்கா தவாறு பாதுகாப்புடன் நடத்த வேண்டிய கடமை அரசுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் உள்ளது. மக்கள் உயிரோடு விளையாடாமல், பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.இவ்வாறு, அவர் தெரிவித் துள்ளார்.

## கவிதை அரங்கம்!





உங்கள்
வாழ்க்கையில்
நீங்கள் மகிழ்ச்சியாக
இருக்க வேண்டுமா?
யாரிடமும் எதையும்
எதிர்பார்க்காதீர்கள்

அணை உடைத்த
நீர் அழிவையே
தரும்
மணம்
உடைத்தவார்த்தை
இழிவையே தரும்

வாழ்க்கையில் நீ தடுக்கி விழுந்தால்
தூக்கிவிட யாரும் வர மாட்டார்கள்
ஆனால் நிமிர்ந்து நீ நடந்தால்
தடுக்கிவிட பலரும் இருப்பார்கள்




## இடைவெளி இல்லை



“இடைவெளி இல்லை... அது நம்மால் எழுதப்பட வேண்டிய ஒரு அழகிய அத்தியாயம்!”

வாழ்க்கை என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இருக்கும் ஒரு சிறிய இடைவெளியே...

எப்போது முடியும் என தெரியாத ஒரு பயணம்

ஆனால் அந்த இடைவெளியில் நாம் செய்யக்கூடிய ஒரு சிறந்த வேலை என்னவென்றால் —

மகிழ்ச்சியாக இருங்கள் ...

மற்றவர்களையும் மகிழ்ச்சியாக்குங்கள்.

வாழ்க்கை என்பது எவ்வளவு நாட்கள் வாழ்ந்தோம் என்பதல்ல...

நாம் எத்தனை நெஞ்சங்களை தொட்டோம் என்பதுதான்.

வசதிகள் எல்லாம் இல்லையெனில் கூட,

ஒரு வார்த்தையாலும், ஒரு பார்வையாலும், ஒரு சிரிப்பினாலும்

ஒருவர் வாழ்க்கையில் ஒளியைக் கொண்டுவரலாம்.

நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுவது —

நாம் பெற்றதாலல்ல... நாமளித்ததால்தான்.

இறுதியில், இந்த சிறிய இடைவெளியே நமக்கு இருக்கிறது...

அதில் நம்மால் முடிந்த அளவு நற்பணி செய்யலாம்.

நம்பிக்கையையும், நேர்மையையும், நேசத்தையும் விதைக்கலாம்.

இது தான் நம் பாதை...

வாழ்ந்துகாட்டுங்கள்.....

நன்றி - ஆனந்தி

# ஜிகர்தண்டா ஸ்பெசல்



திருச்சியின் நெரிசலான சாலையோரத்தில் இருந்த குணசேகரின் சிறிய உணவகம், எப்போதும் கூட்டம் குறையாதது.

ஆனால் ஒரு விஷயம் மட்டும் எல்லோரும் ஜிகர்தண்டா-வைத்தான் ரசித்து குடிப்பார்கள்.

“நல்லா போகுதுங்க, ஆனா இன்னும் கொஞ்சம் வியாபாரம் பெருசா ஆகணும் ...” என மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தார் கடை முதலாளி குணசேகர்..

அந்த நேரம் பம்பரம் போல சுழன்று வாடிக்கையாளர்களுக்கு ஆர்டர்கள் கொண்டு வந்துகொண்டிருந்த ரமேஷ் அருகே நின்று, “அண்ணா, ஒரு யோசனை சொல்லலாமா?” என்றான்.

“சொல்லப்பா...” என குணசேகர் சிரித்தார்.

“ஜிகர்தண்டாவுக்கு இரண்டு வகை வைக்கலாம்னு நினைக்கிறேன்.

ஒன்று சாதாரணம்.

இன்னொன்று பெரிய கண்ணாடி கோப்பைல “ ஸ்பெஷல் ஜிகர்தண்டா.” பெயரே கேக்கும் போது வித்தியாசமா இருக்கும். எல்லோரும் ஸ்பெஷல்தான் கேட்பாங்க.”

குணசேகரின் கண்கள் பிரகாசித்தன. “சரி, நாளையிலிருந்து அப்படியே பண்ணலாம் ரமேஷ்!”

அடுத்த நாள் முதல் உணவக பலகையில் புதிதாய் இரண்டு பெயர்கள் தோன்றின:

சாதா ஜிகர்தண்டா

ஸ்பெஷல் ஜிகர்தண்டா

அழகான கண்ணாடிக் கோப்பையில், மேலே நன்கு அலங்கரிக்கப்பட்ட “ஸ்பெஷல் ஜிகர்தண்டா வந்ததும், கூட்டம் குவிந்தது.

“சார், உங்களுக்கு சாதாவா? ஸ்பெஷலா?” என்று ரமேஷ் கேட்டவுடனே, குடும்பத்தார் ஒருமனதாக “ஸ்பெஷல்!” என்றார்கள்.

காதலர்கள் இருவரும் சிரித்துக்கொண்டு “ஸ்பெஷல் தாங்க!” என்று ஆர்டர் செய்தனர்.

மாணவர்கள் கூட சிரித்துக்கொண்டு, “”சாதா வாங்கினா கேவலமா இருக்கும் ஸ்பெஷல் வாங்கலாம்!” என்று சொல்லிக்கொண்டார்கள்.

சில ரியல் எஸ்டேட் நண்பர்கள் கூட “”எங்களுக்கு ஸ்பெஷல் தாங்க!” என்று சொல்லி பெரிய கண்ணாடியிலே குடித்தார்கள்.



சில நாட்களில் வியாபாரம் பறக்கத் தொடங்கியது.

உணவகம் சலசலப்போடு நிரம்பியது.

முதலாளி குணசேகர் மகிழ்ச்சியுடன் ரமேஷை அழைத்து,

“நீ தான் இந்த கடைக்கு லட்சுமி மாதிரி. உன் யோசனைதான் இந்த வியாபாரத்தை மேலே கொண்டு வந்தது. இனிமேல உனக்கு ஊதியம் உயர்வு!” என்றார்.

ரமேஷின் முகத்தில் பெருமிதம் பொங்கியது.

அந்த உணவகம் ஜிகர்தண்டா ஸ்பெஷல் என்ற பெயரிலேயே நகரமெங்கும் பிரசித்தி பெற்றது. ஆனால் ரமெஷ்க்கும் குணசெகருக்கும் மட்டுமே தெரியும் சாதாவுக்கும் ஸ்பெசலுக்கும் கண்ணாடி கிளாஸ் மட்டும் தான் வித்தியாசம் என்பது..

போலி பெருமை ஆடம்பரம் பேசும் மணிதர்களுக்கு இது தேவை தான் என ரமேஷ் மனதில் நினைத்துக்கொண்டான்.

-ஜனனி அந்தோணி ராஜ்,
திருச்சிராப்பள்ளி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





பையன் : "நான் பெரிய பணக்காரன் கிடையாது, அல்லது என் நண்பன் பிரண்ட் கோபி மாதிரி என்கிட்ட பெரிய காரோ வீடோ கிடையாது, ஆனா நான் உன்ன லவ் பண்றேன்"

பெண் : "நானும்தான், ஆனா உங்க நண்பர் கோபின்னு யாரையோ சொன்னீயே ‘அவர்’ எங்க இருக்கார்?"

## தினம் ஒரு சமையல்



### புதுவித கேக்



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பாதாம் | - ஒரு கப் |
| முந்திரி | - ஒரு கப் |
| தோல் உரித்த பச்சை வேர்க்கடலை | - ஒரு கப் |
| சர்க்கரை | - அரை கிலோ |
| நெய் | - 200 கிராம் |
| பால் | - 100 கிராம் |
| பாதாம் எஸன்ஸ் | - 1 தேக்கரண்டி |

**செய்முறை:**

பாதாம், முந்திரி, வேர்க்கடலை மூன்றையும் தனித்தனியாக ஊற விடவும்.

பாதாமின் தோல் நீக்கி மூன்றையும் விழுதாக அரைக்கவும்.

அரைத்த விழுதுடன் பால், சர்க்கரை, நெய் சேர்த்து ஒரு வாணலியில் வைத்து அல்வாவாக சுருள கிண்டி எடுக்கவும்.

பாதாம் எஸன்ஸ் ஒரு ஸ்பூன் சேர்த்து ஆறியபின் துண்டு போடவும்.

## அத்தி நன்மைகள்



அத்திப்பழம் பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது. இது செரிமானத்திற்கு உதவுவதோடு, இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும், இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. மேலும், இதில் அதிக அளவு கால்சியம் இருப்பதால், எலும்புகளையும் நகங்களையும் வலுவாக்குகிறது. அத்திப்பழம் உடல் எடையைக் குறைக்கவும் உதவுகிறது.

**செரிமானத்திற்கு நல்லது:**

அத்திப்பழத்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது, இது செரிமான அமைப்பை சீராக இயங்க உதவுகிறது மற்றும் மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகளைத் தடுக்கிறது.

**சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும்:**

அத்திப்பழத்தில் உள்ள குளோரோஜெனிக் அமிலம் இரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

**இதய ஆரோக்கியம்:**

அத்திப்பழத்தில் உள்ள பொட்டாசியம், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், இதய நோய் அபாயத்தைக் குறைக்கவும் உதவுகிறது.

**எலும்புகளை வலுவாக்கும்:**

அத்திப்பழத்தில் கால்சியம் அதிகம் உள்ளது, இது எலும்புகளை வலுவாக்குகிறது மற்றும் ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற எலும்பு நோய்களைத் தடுக்கிறது.

**எடை இழப்பு:**

அத்திப்பழம் குறைந்த கலோரிகள் மற்றும் அதிக நார்ச்சத்து கொண்டது, இது பசியைக் கட்டுப்படுத்தவும், உடல் எடையை குறைக்கவும் உதவுகிறது.

**தோல் மற்றும் முடிக்கு நல்லது:**

அத்திப்பழத்தில் உள்ள ஆக்ஸிஜனேற்றிகள், தோல் மற்றும் முடியின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றன.

**மலச்சிக்கலை போக்கும்:**

அத்திப்பழம் மலச்சிக்கலை போக்க உதவும் ஒரு எளிய வீட்டு வைத்தியமாகும்.

அத்திப்பழம் பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது, குறிப்பாக ஊறவைத்த அத்திப்பழம், இதை தினமும் சாப்பிட்டு வந்தால் பல்வேறு நன்மைகளை பெறலாம்.

# பிரபாஸ் நடிக்கும் ராஜாசாப்..!- டிரெயிலர் வெளியாகும் தேதி அறிவிப்பு




பிரபாஸ் கடைசியாக நடித்த கல்கி 2898 ஏடி திரைப்படம் மாபெரும் வெற்றியடைந்தது. இப்படம் 1100 கோடி ரூபாய் வசூலித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த படத்தை தொடர்ந்து, அடுத்ததாக மாருதி இயக்கத்தில் பிரபாஸ் தி ராஜாசாப் திரைப்படத்தில் நடித்துள்ளார். படத்தின் ஃபர்ஸ்ட் கிளிம்ப்ஸ் மற்றும் டீசர் வீடியோவை சில மாதங்களுக்கு முன் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

திரைப்படம் அடுத்தாண்டு சங்கிராந்தியை முன்னிட்டு ஜனவரி 9 ஆம் தேதி வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது. ஐதராபாத்தை தொடர்ந்து, அடுத்தக்கட்ட படப்பிடிப்பு செப்டம்பர் 17 ஆம் தேதி கேரளாவில் தொடங்கியது.

அக்டோபர் இறுதியில் மொத்த படப்பிடிப்பு பணிகளும் நிறைவடைந்துவிடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இப்படம் ஒரு ஹாரர் திரில்லர் கதையமசத்தில் உருவாகியுள்ளது. மிகவும் பிரம்மாண்டமாக ஹாரர் காட்சிகள் படத்தில் இடம் பெற்றுள்ளது. பிரபாஸ் மிகவும் ஜாலியாக நகைச்சுவைத்தனத்துடன் நடித்துள்ளார்.

பிரபாஸுடன் மாளவிகா மோகனன், நிதி அகர்வால், மற்றும் ரிதி குமார் முன்னணி பெண் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். படத்தில் சஞ்சய் தத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்தை டிஜி விஷ்வா பிரசாத் தயாரிக்கவுள்ளார். படத்திற்கு எஸ் தமன் இசையமைத்துள்ளார்.

இப்படம் பான் இந்தியன் படமாக இந்தி, தமிழ், தெலுங்கும், மலையாளம், கன்னடம் என அனைத்து மொழியிலும் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தில் டிரெயிலர் வெளியாகும் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, ராஜாசாப் படத்தின் டிரெயிலர் நாளை மாலை 6 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.





## சினிமா

தென்னிந்திய சினிமாவில் பிரபலமான நடிகைகளில் ஒருவர் ஆஷிகா ரங்கநாத். இவர் கன்னடத்தில் அறிமுகமாகி தொடர்ந்து பல படங்களில் கதாநாயகியாக நடித்து வந்தார். பட்டத்து அரசன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். இதை தொடர்ந்து மிஸ் யூ படத்தில் சித்தார்த் உடன் இணைந்து நடித்திருந்தார். மேலும் தற்போது கார்த்தியுடன் இணைந்து சர்தார் 2 படத்தில் நடித்து வருகிறார். நடிகை ஆஷிகா ரங்கநாத் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது பதிவு செய்வார். அந்த வகையில், சேலையில் தான் எடுத்துக்கொண்ட லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com